

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் அவர்கள் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்ததை முன்னிட்டு இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா கிழக்கு ஒன்றியம் சுமைதாங்கி ஊராட்சியில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜே.யு.சந்திரகலா, ஒன்றிய செயலாளர் எம்.சண்முகம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், சித்திலிங்கமடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் ஷேக் அப்துல் ரகுமான், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , பி.வி. ஆர்.சு.விசுவநாதன், ஓம்சிவசக்திவேல், கோமதி நிர்மல் ராஜ், மோகன், சடகோபன், ஏழுமலை, காசி.விஸ்வநாதன், மாதவன், உமா மகேஸ்வரி சதிஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

### கடலூர் மாவட்டத்தில்

# ரூ.10.07 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், ஆக.13-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், குறிஞ்சிப்பாடி பேரூராட்சி மற்றும் வடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.10.07 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை 11.08.2025 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களுக்கு உயர்தரமான சுகாதாரமான வாழ்க்கை சூழலை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதற்காகவும், மாணவர்களுக்கு எளிதில் கல்வி சென்றடையும் வகையிலும், தமிழ்நாடு அரசினால் அவ்வப்போது அறிமுகப்படுத்தும் திட்டங்களின் பயன்கள் விரைந்து பொதுமக்களை சென்றிட வேண்டும் என்பதற்காகவும் ஏராளமான உட்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகளை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கும் நோக்கில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை கடலூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் 378 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டதில் இதுவரை 118 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இம்முகாம்களில் 50,124 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. குறிப்பாக மகளிர் உரிமைத் தொகை கோரி 33,600 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

பொதுமக்களின் உடல் நலத்தினை பேணும் வகையில் புதியதாக தொடங்கப்பட்ட நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் 43 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டதில் குறிஞ்சிப்பாடி மற்றும் திட்டக்குடி ஆகிய இடங்களில் இரு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பாடியில் 1076 பயனாளிகளும், திட்டக்குடியில் 871 பயனாளிகளும் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

பள்ளி மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் நோக்கில் மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தில் 39,828 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 24,244 மாணவர்களும், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் ஊரகப் பகுதிகளில் 50,102 மாணவர்களும், நகர்ப்புற பகுதிகளில் 9,015 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குள்ளஞ்சாவடியில் பச்சிளம் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலில் கல்வி வழங்கவேண்டுமென்ற அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூ.16.45 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, ஆரம்பக்கல்வி மற்றும் சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. பள்ளிக்கு செல்வதற்கு முன் குழந்தைகளுக்கு அடிப்படை கல்வியை கற்றுக்கொடுக்கிறது. இதனால் அவர்களின் அறிவாற்றல் திறனை வளர்க்க உதவுவதுடன், இப்பகுதியில் உள்ள கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தடுப்பூசி போடப்படுவது மட்டுமில்லாமல் ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

பள்ளி மாணவ/மாணவிகள் பாதுகாப்பான சூழ்நிலையில் கல்வி பயில்வதற்கு ஏதுவாக குள்ளஞ்சாவடி அரசு மேல்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.167.16 இலட்சம் மதிப்பீட்டில் 1121.92 ச. அடி பரப்பளவில் 5 வகுப்பறை, அறிவியல் ஆய்வகம், ஒரு ஆண்கள் கழிப்பறை மற்றும் ஒரு பெண்கள் கழிப்பறை கட்டடங்களும், கட்டியங்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.423.99 இலட்சம் மதிப்பீட்டில் 5,751.44 சதுர அடி பரப்பளவில் 10 வகுப்பறை, அறிவியல் ஆய்வகம், இரண்டு ஆண்கள் கழிப்பறை மற்றும் மூன்று பெண்கள் கழிப்பறை கட்டடங்களும், தம்பிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.34.70 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் பள்ளிக் கட்டடமும்,

குறிஞ்சிப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 வகுப்பறை கட்டடங்களும், வடலூர் நகராட்சிக்குட்பட்ட சேராக்குப்பம் மற்றும் காட்டுக்கொல்லை துவக்கப் பள்ளிகளில் 6அவது மாநில நிதிக்குழு பள்ளி மேம்பாட்டு மானியம் திட்டத்தின் கீழ் தலா ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 வகுப்பறைக் கட்டடங்களும் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்டு, இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு உயர்தரமான மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவையினை வழங்கிடும் பொருட்டு ஏராளமான மருத்துவம் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் வடலூர் சத்திய ஞான சபை அருகில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி பொதுமக்கள் மருத்துவ வசதிகளுக்காக வெளியிடங்களுக்கு செல்வது தவிர்க்கப்படுகிறது.

கிராமப்புற மக்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையிலும், தங்கள் ஊராட்சிகளிலே அரசு சான்றுகள், வீட்டுவரி, சொத்துவரி, குடிநீர் வரி கட்டிடும் வகையில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தையல்குணாம்பட்டினம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் 15ஆவது நிதிக்குழு மானியம் திட்டங்களின் மூலம் ரூ.39.95 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி செயலக அலுவலக கட்டடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. மேலும், குறிஞ்சிப்பாடி சட்டமன்ற அலுவலகத்தில் பொதுமக்களின் தேவையினை கருத்தில் கொண்டு ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் இ-சேவை மையம் மற்றும் காத்திருப்புக் கூடம் கட்டப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அடிப்படை உணவு தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பார்வதிபுரம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்ட நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர்எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடலூர் நகரமன்ற தலைவர் சிவக்குமார், ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ஏ.அ.பிரியங்கா கூட்டுறவுத் துறை மண்டல இணைப் பதிவாளர் இளஞ்செல்வி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எல்லப்பன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சிவசங்கரநாயகி, மாவட்ட சுகாதார அலுவலர் பொற்கொடி, வடலூர் நகராட்சி ஆணையாளர் ரஞ்சிதா, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி செயல்அலுவலர் பாலமுருகன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் கோலியனூர் ஒன்றியம், கண்டம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் கப்பூர் கே.என்.பி.ராஜா, ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கட்டியங்குப்பம் அரசு மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வகத்தினை 11.08.2025 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ஏ.அ.பிரியங்கா உட்பட பலர் உள்ளனர்.

### புதியதாக சிறுத்தை புலிகள் சரணாலயம் உருவாக்கப்படுமா?

# நாட்டில் வனப்பகுதியை அதிகரிக்க நடவடிக்கை உள்ளதா?

## மக்களவையில் வேலூர் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக.13-

நாட்டில் வனப்பகுதியை அதிகரிக்கவும், புதிய புலி/சிறுத்தை சரணாலயங்கள் உருவாக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர். டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

கடந்த பத்தாண்டுகளில் இயற்கை வனப்பகுதி குறைந்து வருகிறதா, அப்படியானால், நாட்டில் வனப் பகுதியின் நிலை மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி, மாநிலம்/யூனியன் பிரதேச வாரியாக தெரிவிக்கவும்.

சிறுத்தை மற்றும் புலிகள் காணப்படுவது மற்றும் வாழ்விடங்கள் பற்றிய அறிக்கைகளைக் கருத்தில் கொண்டு, பல்வேறு வனவிலங்கு சரணாலயங்களை புலி/சிறுத்தை சரணாலயங்களாக அறிவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இது தொடர்பாக மாநில அரசுகள் மத்திய அரசை அணுகியுள்ளனவா, அப்படியானால், அதற்கான அரசின் பதில் மற்றும்

தமிழ்நாட்டில் புதிய புலிகள் சரணாலயங்களை உருவாக்குவதற்கான ஏதேனும் திட்டத்தை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) ஏற்றுக்கொண்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் தெரிவிக்கவும்.

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அமைச்சர் ராஜாங்க கீர்த்தி வர்தன் சிங் எழுத்துபூர்வமாக அளித்த பதில் வருமாறு:

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு அமைப்பான டேராடூனில் உள்ள இந்திய வன ஆய்வு (FSI), நாட்டின் காடுகள் மற்றும் மரங்களின் பரப்பளவை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்கிறது மற்றும் கண்டுபிடிப்புகள் இந்திய வன நிலை அறிக்கையில் (ISFR) வெளியிடப்படுகின்றன.

கடந்த பத்து ஆண்டுகளில் மாநில/யூனியன் பிரதேச வாரியான வனப்பகுதியின் விவரங்கள் இணைப்பு 1ல் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்படி கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் 2,205 சதுர கிலோ மீட்டர் வனப்பரப்பு அதிகரித்துள்ளது.

காடுகளின் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முதன்மையாக மாநில அரசுகள்/யூனியன் பிரதேச நிர்வாக ங்களின் பொறுப்பாகும்.

நாட்டில் உள்ள காடுகளின் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்காக அமைச்சகம் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை வழங்குகிறது. பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதி, வனப்பகுதிகளுக்கு உள்ளேயும் வெளியேயும் காடு வளர்ப்பு, வன நிலப்பரப்பு மறுசீரமைப்பு, வாழ்விட மேம்பாடு, மண் மற்றும் நீர் பாதுகாப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பிற தொடர்புடைய தலையீடுகள் போன்ற சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மூலம் காடு மற்றும் மரங்களின் பரப்பை மேம்படுத்துவதற்கான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முயற்சிகளை ஆதரிக்கிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் காட்டுத் தீ தடுப்பு மற்றும் மேலாண்மை திட்டத்திற்காக தமிழ்நாடு மாநிலத்துக்குரூ. 7 கோடியே 39 இலட்சம் ரூபாய் ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. நகர் வான் யோஜனா (NVY) திட்டத்திற்காக 12 கோடியே 23 இலட்ச ரூபாய் வழங்கியுள்ளது. வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாடு திட்டத்திற்காக 18 கோடியே 93 இலட்ச ரூபாய் வழங்கியுள்ளது.

மேலும், 2024 உலக சுற்றுச்சூழல் தினத்தன்றும், நடப்பு ஆண்டிலும் நாடு முழுவதும் தோட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக “ஒரு பெரிய தாய்” என்ற தோட்ட பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சாரம், நாட்டில் பசுமைப் பரப்பை அதிகரிப்பதற்காக அனைத்து பங்குதாரர்களின் பங்கேற்புடன் “முழு அரசாங்கத்தின்” மற்றும் “முழு சமூகத்தின்” அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. இந்த பிரச்சாரம் நாட்டில் பசுமைப் பரப்பை அதிகரிக்க உதவும் பெரிய அளவிலான தோட்டக்கலைக்கு பங்களித்துள்ளது.

மாநில அரசுகளிடமிருந்து பெறப்பட்ட திட்டங்கள் 1972 ஆம் ஆண்டு வன விலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் பிரிவு 38V இன் விதிகளின்படி பரிசீலிக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம். வனம் மற்றும் காலநிலை மாற்றம், ஒடிசா மாநிலத்தில் உள்ள சுனபேடா மற்றும் டெபரிகார் வனவிலங்கு சரணாலயங்கள்; பீகார் மாநிலத்தில் உள்ள கைமூர் வனவிலங்கு சரணாலயம், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கும்பல்கர் வனவிலங்கு சரணாலயம்; கர்நாடக மாநிலத்தில் உள்ள மலை மகாதேஸ்வரா மலைகள் வனவிலங்கு சரணாலயம் மற்றும் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள தபாங் வனவிலங்கு சரணாலயம் ஆகியவற்றிற்கு புலிகள் காப்பகமாக அறிவிக்க கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் குறிப்பிட்டிருந்தார்.

### திருப்பத்தூர் பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள

# அகர்பத்தி உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பீர்!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக.13-

திருப்பத்தூர் பகுதிகளில் அமைந்துள்ள அகர்பத்தி தொழில்கள் இறக்குமதி வரியால் வெகுவாக பாதித்துள்ளது. எனவே அகர்பத்தி உற்பத்தியை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள வையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என். அண்ணா துரை வலியுறுத்தியுள்ளார்.

அவர் பேசியது வருமாறு:-

திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் பகுதிகளில் அமைந்துள்ள அகர்வத்தி (ஊதுபத்தி) தொழில், அதிக இறக்குமதி வரி, சிக்கலான விதிகள் மற்றும் போதுமான வணிக வசதிகள் இல்லாததால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக அகர்வத்தி உற்பத்தி, அதன் ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை இப்பகுதியில் அதிக அளவில் தடைபடுகின்றன. தற்போது சுமார் 50,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த அகர்வத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

திருப்பத்தூர் மாவட்டம் நாட்டின் மொத்த அகர்வத்தி உற்பத்தியில் 50 சதவீதத்தை உற்பத்தி செய்கிறது.

அகர்வத்தி வேலைவாய்ப்பை உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் இப்பகுதியில் அதிகரிக்க, அகர்வத்தி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பொருட்களின் மீதான இறக்குமதி வரியை விலக்கு அளிக்கவும், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - (2019), போட்டி சட்டம்-(2002), சட்ட அளவீடு விதிகள் (2011) மற்றும் எம்.எஸ். எம்.இ.டி.சட்டம்-(2006) போன்ற சட்ட விதிகளை தாராளமயமாக்கவும் எளிமைப்படுத்தவும் ஒன்றிய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஜோலார்பேட்டை ரயில் சந்திப்பில் சுங்க அலுவலகம் அமைத்து தொழில் செய்வதை எளிதாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தினார்.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கருத்தரங்கம் மற்றும் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாபெரும் கருத்தரங்கம் மற்றும் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் புதுக்கோட்டை, மாலையீடு, கற்பகவிநாயகர் மஹாலில் 16.08.2025 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையிலும், ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் வி.பி.இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, செ.புஷ்பராஜ், மாநில துணை செயலாளர்கள் பி.துரைசாமி, அரூர் சா.இராஜேந்திரன், கொடநாடு மு.பொன்தோஸ், மூ.பரமானந்தம், எஸ்.மாரியப்பன் கென்னடி, சி.தசரதன் மற்றும் தகடூர் கொ.ரமேஷ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கு கூட்டத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சரும் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும் ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவருமான மா.மதிவேந்தன் மற்றும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் கருத்தரங்கை துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை-18.
நாள்: 11.08.2025.

**ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு